

# அலகு 10




CW4BH

# நிலத்தோற்றம் மற்றும் காலநிலை புள்ளிவிவரங்களைக் காட்டும் முறைகள்

**அத்தியாயக் கட்டகம்**

*10.1* அறிமுகம்
*10.2* நிலத்தோற்றத்தைக் காட்டும் முறைகள்
*10.3* காலநிலை வரைபடங்கள்
*10.4* காற்றுப்போக்கு படம்

**கற்றல் நோக்கங்கள்**

- பலவகையான நிலத் தோற்றங்களை அடையாளம் காணுவதைப் புரிந்துகொள்ளுதல்.
- நிலஅளவை வகைகளைப் பட்டியலிடுதல்.
- சம உயரக் கோடுகளின் குறுக்குவெட்டுத் தோற்றத்தை வரைந்து நிலதோற்றத்தைக் கண்டறிதல்.

## 10.1 அறிமுகம்

நிலவரைபடத்தில் பயன்படும் கோட்டுச் சட்டம் மற்றும் அளவையைப் பொறுத்து நிலவரைபடம் ஒரு இடத்தின் அனைத்து தகவல்களையும் தருகிறது. இருபரிமாண நிலவரைபடம் பல்வேறு முறைகளின் மூலம் முப்பரிமாணத்தோற்றத்தை உருவாக்க முடியும். இந்த முறைகள் பண்டைய காலம் முதல் நடைமுறையில் இருந்து வருகிறது.

## 10.2 நிலத்தோற்றத்தைக் காட்டும் முறைகள்

மலைக்குறிக்கோடுகள் (Hachures), சம உயரக்கோடுகள் (Contours), உருவத்தோற்றக் கோடுகள் (form lines) சம உயரப்புள்ளிகள் (Spot Height), மட்டக்குறி (Bench mark), முக்கோண நிலையங்கள் (Trigonometrical station) நிழல் பட்டை முறை (Hill shading), நிறப்பட்டை முறை (layer colouring) போன்றவை நிலத்தோற்றங்களைக் காட்டும் முக்கியமான முறைகளாகும். ஒவ்வொரு முறைக்கும், நிலத்தோற்றத்தை காண்பிக்கும் பண்புகளும், வரையறைகளும் உண்டு.

### மலைக்குறிக்கோடுகள் (Hachures)

மலைச்சரிவைக் காட்டும் சிறிய கோடுகளை மலைக்குறிக்கோடுகள் என்கிறோம். இது வன்சரிவை அடர்த்தியான கோடுகளாலும் மென்சரிவை மெல்லியக் கோடுகளாலும் காட்டுகிறது. சரிவின் கோணம் $45°$ க்கு மேல் இருந்தால் அது முற்றிலும் கருப்பு நிறத்தில் காட்டப்படுகிறது.



Tamil_11th Geography_Unit_10.indd 270 15-12-2021 18:03:07